அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக் கடிதம் : 03/2019

எனது இலக்கம்:EST-4/02/REM/0198-01
பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கால்நடை அபிவிருத்தி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2019.10.28

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துதல்</u>**

ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தும் போது ஏற்புடையதாகும் ஏற்பாடுகள் உள்ளடங்கிய 2018.02.20 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை தொடர்பில் உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன்.

02. அந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தரொருவரை மீண்டும் சேவயில் ஈடுபடுத்துவதாயின் அது தொடர்பில் பின்வரும் விபரங்களை அவ்வுத்தியோகத்தரை சேவையில் ஈடுபடுத்தி ஒரு மாதம் பூர்த்தியடைய முன்னர் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

I. மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட ஓய்வூதியகாரரின் பெயர்
II. ஓய்வுபெற முன்னர் உரித்துடைய சேவை, வகித்த பதவி/ தரம்
III. மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பதவி/ தரம், பதவிக்குரிய சேவை
IV. ஓய்வூதிய இலக்கம்
V. மீண்டும் சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதியளிக்கப்பட்ட கடிதத்தின் குறிப்பிலக்கம்
VI. மீண்டும் சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதியளிக்கப்பட்ட காலப் பகுதி

03. ஒப்பந்த அடிப்படையில் நியமனங்களை வழங்கும் போது போன்று ஓய்வூபெற்ற உத்தியோகத்தரொருவர்ரின் ஒப்பந்த நியமனத்தை நீடிக்கும் போதும் மேலே 02 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு தகவல்களை வழங்குதல் வேண்டும்.

ஒப்பம்./ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கால்நடை அபிவிருத்தி அமைச்சு